# வரலாறு

## தரம் - 11



க.இளங்கோ

G. Ramja

# வரலாறு

## புதியபாடத்திட்டம்

## தரம் -11

**(G.C.E O/ L )**

வினாவிடைகள்
கணிப்பீட்டுப்பயிற்சிகள்
விளக்கப்படங்கள்

ஆக்கம்
கனகசபை இளங்கோ

## நூலாசிரியரிடமிருந்து......

மாணவர்களின் கற்றல் செயற்பாடானது விருத்தியடையும் பொருட்டு பல நூல்களை இதுவரை ஆக்கி வெளியிட்டுள்ளேன் அந்தவகையில் 2008 இல் தரம் 11 மாணவர்களின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வரலாறு பாடத்திற்கான பயிற்சி நூலினை மாணவர்களின் நன்மை கருதி குறுகியகாலத்தினுள் ஆக்கி வெளியீட்டுள்ளேன் இதன்மூலம் வரலாற்றுப் பாடப்பரப்பில் உள்ள விடயங்களை விளக்கியும் இலகுவாக கற்பதற்காக வினாவிடையாக இலகு படுத்தி வழங்கியுள்ளேன் இதன்மூலம் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு இந்நூல் வழிசமைக்கும்

***நூலாசிரியர்***

## நூலின் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | வரலாறு புதியபாடத்திட்டம் |
| நூலாசிரியர் | - | கனகசபை இளங்கோ |
| மொழி | - | தமிழ் |
| பக்கம் | - | 156 |
| நூல் உரிமை | - | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | - | 2008 ஏப்ரல் |
| மீள்பதிப்பு | - | 2008 யூன் |
| திருத்திய மீள்பதிப்பு | - | 2009 ஆகஸ்ட |
| திருத்திய மீள்பதிப்பு | - | 2010 ஆகஸ்ட் |
| கணணி வடிவமைப்பு | - | இ.சுதர்சன் |
| அச்சுப்பதிப்பு | - | சூரியா அச்சகம் வவுனியா |
| விலை | - | 280 |

# பொருளடக்கம்

1. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிறுவப்படல்.

2. பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக பொருளாதார மாற்றங்கள் .

3. இருபதாம் நூற்றாண்டில் ஆசிய நாடுகளின் எழிச்சி.

4. உலகமாகாயுத்தங்களும் சமாதான முயற்சிகளும்

5. உலக அதிகார சமநிலை.

6. சுதந்திரத்தின் பின்னர் இலங்கை

# அத்தியாயம் - 01

## இலங்கையில் பிரித்தானியர்ஆட்சி நிறுவப்படல்

**01) பிரித்தானியரின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்பிய தற்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- இந்து சமுத்திர கப்பல் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந்தமை.
- தென்மேல் .வடகீழ் பருவக்காற்றுக்காலங்களில் கப்பல்களை நிறுத்திவைக்கக் கூடிய திருகோண மலைத்துறை முகம் இலங்கையில் அமைந்திருந்தமை.
- இந்தியாவின் மேற்குக்கரை. கிழக்குக்கரைகளில் கப்பற் படைகளை இலங்கையிலிருந்து இலகுவாக நிர்வகிக்கக் கூடியதாக இருந்தமை .
- வர்த்தகத்தின் முக்கியத்துவம் ஐரோப்பாவுக்கு கொண்டு செல்லப்பட்ட கறுவாவில் இலங்கைக் கறுவாவிற்கு இருந்த மதிப்பு.
- போத்துக்கேயரும. ஒல்லாந்தரும் இலங்கையின் கறுவா வியாபாரத்தின் மூலம் பெற்ற இலாபத்தினை ஆங்கிலேயர் தம்வசமாக்கிக் கொள்ளல்.

**02) கரையோரப்பிரதேசங்களில் பிரித்தானியர் ஆதிக்கம் நிலை நாட்டப் பட்டவிதத்தினைக் குறிப்பிடுக?**

- கி-பி1798 இல் ஏற்பட்ட பிரான்சிய புரட்சியின் பின்னர் ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் பிரானஸ் போரிட்டமை.

- 1794 இல் ஒல்லாந்தை பிரான்ஸ் ஆக்கிரமித்தபோது இளவரசன் வில்லியம் ஸ்டாட் ஹோட்டன் (2ம் ஒரேஞ் வில்லியம் பிரித்தானியாவுக்கு தப்பியோடியமை)

- இதனால் இலங்கையில் ஒல்லாந்தர் வசமிருந்த பகுதிகளை பிரான்சியர் கைப்பற்றுவர் என்ற சந்தேகம் நிலவியது. கீயூ மாளிகையில் இருந்த இளவரசன் வில்லியம் ஸ்டாட் ஹோல்டன் 1795 பெப்ரவரி 7ஆம் திகதி இலங்கையின் ஒல்லாந்த தேசாதிபதிக்கு கீயூ கடிதத்தை அனுப்பி வைத்தான் கீயூக்கடிதத்தின் படி செயற்படுவதற்கு தேசாதிபதி பன்ஏங்கல் பெக் விரும்பவில்லை .

- எனவே ஆங்கிலேயர் 1797 இல் ஆகஸ்மாதத்தில் ஒல்லாந் தரைத்தாக்கி திருகோணமலையினை கைப்பற்றிக் கொண்டனர் தொடர்ந்து யாழ்பாணம் மன்னார் கற்பிட்டி பகுதிகளை கைப்பற்றிக் கொண்டு 1796 இல் பெப்ரவரி 16 ஆம் திகதி கொழும்பையும் கைப்பற்றிக் கொண்டனர் அன்றைய தினம் ஒல்லாந்துதேசாதிபதி பன்ஏங்கல் பெக் ஒல்லாந்தருக்கு சொந்தமான பிரதேசங்களை ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்

- ஆங்கிலக்கிழக்கிந்திய வர்த்தகக்கம்பனியால் பொறுப் பேற்கப்பட்ட இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் அந்நிறுவனத்தின் சென்னை நிர்வாக மத்திய நிலையத்தால் நிர்வகிக்கப்பட்டது

**03) கி -பி 1797 இல் கரையோர மக்கள் கிளர்ச்சி மேற்கொண்டமைக்கான காரணங்கள்?**

- வரி அறவிடுவதற்கு சென்னை நிர்வாகிகள் அமர்த்தப் பட்டமை
- அவுமில்தார்கள் மக்களை கஸ்ரப்படுத்தி வரி அறவிட்டமை.
- பணப்புழக்கம் இல்லாத காரணத்தினால் பணமாக வரி அற விட்டமையால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம்.
- புதிய வரிகள் அறவிடப்பட்டமை.
- கரையோர மக்கள் முகம் கொடுத்த பிரச்சினைகள் பற்றி சென்னை அதிகாரிகளிடம்முறையிட்டபோதும் எவ்வித பயனும் ஏற்படாமை.
- சென்னை நிர்வாகத்தால் வெறுப்படைந்த மக்கள் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சியினை மேற்கொண்டனர்

**04) மியூ ரன் குழுவினால் முன்வைக்கப்பட்ட சிபார்சுகளைக் குறிப்பிடுக?**

- வரி ஏல விற்பனை முறையினை ஒழித்தல்
- வரி அறவிடுவதற்குப் பதிலாக சென்னை அதிகாரிகளுக்குப் பதிலாக உள்நாட்டவரை அமர்த்துதல்.
- தென்னை வரி முதலிய புதிய வரிகளை நீக்குதல்
- ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை மீண்டும் நடைமுறைப் படுத்துதல்.

**05) இரட்டை ஆட்சி என்பது?**

- சென்னை நிர்வாகத்தின் பலவீனங்களை புரிந்து கொண்ட பிரித்தானிய அரசாங்கம் 1798 ஒக்டோபர் மாதம் முதல் கரையோர நிர்வாகத்தில் பங்கு பற்றியது இவ்வாறு பிரித்தானிய முடியின் பிரதிநிதியும் வர்த்தகக்கம்பனியும் இணைந்து மேற்கொண்ட நிர்வாகம் இரட்டையாட்சி முறை எனப்பட்டது.

6) **இலங்கை பிரித்தானிய முடிக்குரிய நாடாக்கப்பட்ட ஆண்டு?**
கி -பி 1802

07) **கி -பி 1815 இற்கு முன்னரே கண்டியினைக் கைப்பற்றுவதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்து அதற்கான சான்றுகள்.**

- 1800 இல் மக்டோவால் எனும் தளபதியின் கீழ் கண்டிக்கு ஒரு படையினை அனுப்பி கண்டி மன்னனுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ள ஆளுனர் நோர்த் முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை

- 1803 ஜனவரியில் ஆங்கிலத்தளபதி மக்டோவின் தலைமையிலான படை கண்டி இராட்சியத்தை ஆக் கிரமித்தது.

- இப்படையெடுப்பில் கொழும்பிலிருந்தும் திருகோணமலை யிலிருந்தும் ஒரே சமயத்தில் இரு படையணிகள் கண்டி மீது படையெடுத்தமை.

- ஆங்கிலப்படைகள் கண்டியினை அடைந்த போது மலையக மன்னன் தனது படைகளுடன் அங்குரங்கெத்தபகுதியை நோக்கிப் பின்வாங்கியமை.

- இச்சந்தர்பபத்தில் ஆங்கிலப்படைகள் தாம் அழைத்துவந்த முத்துச்சாமி எனும் நாயக்க இளவரசனை அரனாக்கியமை.

- ஆங்கிலேயருக்கு சார்பான ஆட்சியாளனாகமுத்துச்சாமியை அமர்த்தி அவனுடன் ஒர் ஒப்பந்தத்தினை செய்து கொண்டனர்.

- முத்துச்சாமிக்கு பாதுகாப்பான ஒரு படையினை நிறுத்தி விட்டு ஆங்கிலப்படைகள் கொழும்புக்குத் திரும்பியது.

Br. Ramya

- இந்நேரத்தில் மறைந்திருந்த ஸ்ரீவிக்கிரம ராஜசிங்க மன்னன் தனது படையுடன் வந்து ஆங்கிலப்படையைத் தாக்கினான்

- சிங்களப்படைகளின் கெரில்லாத் தாக்குதலின் காரணமாக ஆங்கிலப்படைகள் தோல்வியினை தழுவியது.

**08) கி-பி1803 இல் பிரட்றிக் நோர்த் கண்டியினைக் கைப்பற்றிக் கொள்ள தீர்மானித்ததற்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- கரையோரமாகவும் கண்டிஇராட்சிய எல்லையிலுமாக இருபடையினரைசேவையில்அமர்த்தவேண்டியுள்ளமை.
- கண்டி இராட்சியத்திற்குள் பிரவேசிக்கும் கடவைகளில் வரி செலுத்த வேண்டி இருந்தமை.
- கரையோர மக்களும் கண்டி மன்னனை தலைவனாகக் கருதியமை.
- நிர்வாக நகரான கொழும்பிற்கும் துறைமுக நகரான திருகோணமலைக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்த கண்டி இராட்சியம் தடையாக இருந்தமை.
- ஆங்கிலேயரைத் துரத்துவதற்கு மலையக மன்னன் பிரான்சிய மன்னனை நாடலாம் என்ற சந்தேகம்
- கரையோர வர்த்தகத்துக்கு கண்டிப்படைவீரர்கள் துன்ப மிழைத்தமை.
- பிலிமத்தலாவை மகா அதிகாரம் கண்டி அரசனாவதற்கு ஆங்கிலேயரின் உதவியை நாடியமை.

**09) கன்னசாமி (கண்ணுசாமி) என்ற பெயருடைய நாயக்கவம்ச அரசன் யார்?**

- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

**10) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை கொலை செய்ய சதித்திட்டம் திட்டியவர் யார்?**

- பிலிமத்தலாவ

**11) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்கு எதிராக சப்பிரகமுவவில் கலகம் ஏற்படுத்தியவன் யார்?**

- எகலப்பொல

**12) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் எங்கே தங்கியிருக்கும் போது யாரால் கைது செய்யப்பட்டு ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டான்?**

- கண்டி மத்தியிலுள்ள போமுரே கல்லாவததே உடுப்பிட்டிய ஆராச்சியின்வீட்டிலிருக்கும்போது எக்நெலிகொடநிலமேயினால் கைது செய்யப்பட்டான்

**13) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலம்?**

- கி - பி 1798 - 1815

**14) நாயக்க ( வடுகர் ) வம்சத்தை சேர்ந்தவர் யார்?**

- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

**15) றொபோட் பிறவுண்றிக்கின் பணிகள்.**

- கி -பி 1812 1820 வரை இவரதுஆட்சிக்காலமாகும்
- ஆயுத பலத்தை விட தந்திரத்தால் கண்டியைக் கைப்பற்றிவிட வேண்டும் என எண்ணிணார்
- ஜோன்டொய்லி என்பவனைப் பயன்படுத்தி மலையகம் பற்றிய தகவல்களை அறிந்துகொண்டான்.

**16) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை பிரதானிகள் பொதுமக்கள் மதகுருமார்கள் ஆகியோர் வெறுத்தமைக்கான காரணம் யாவை?**

- மன்னர் நாயக்க பிரதானிகளுக்கு கூடிய சலுகையினை வழங்கியமை.
- சிங்களப் பிரதானிகளின் சலுகைகள் பறிக்கப்பட்டமை.
- கொடுரமான தண்டனைகளை வழங்கியமை
- பௌத்த குருமாருக்கு மரண தண்டணை விதித்தமை

- பொதுமக்களிடம் இராஜகாரிய முறையின் கீழ் கடுமையாக வேலை வாங்கியமை.
- மல்வத்த பீடத்தின் இடத்தினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு ஆலோசித்தமை.

**17) எஹலபொல ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்த ஆண்டு?**

- கி - பி 1814

**18) றொபோட் பிறவுண்றிக்கால் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு வெற்றியடைந்தமைக்கான காரணங்கள்?**

- ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனை மலைநாட்டு மக்கள் வெறுத்தமை.
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் கொடுமைகளில் இருந்து விடுபட மலையக மக்கள் ஆங்கிலேயரின் உதவியினை நாடியமை.
- எஹலபொலையின் வழிகாட்டுதல்ஆங்கிலேயருக்குக் கிடைக்கப்பெற்றமை.
- மொல்லிக்கொட எதிர்ப்பைக்காட்டது பிரித்தானியர் பக்கம் சார்ந்தமை.

**19) ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனின் மனைவி பெயர்?**

- ரங்கம்மா

**20) பிரித்தானியர் கண்டியினைக் கைப்பற்றிய ஆண்டு?**

- கி -பி 1815

**21) கண்டியஒப்பந்தம் எழுதப்பட்ட ஆண்டு எது?**

- கி -பி 1815

**22) கண்டிய ஒப்பந்தம் என்பது?**

- கி -பி 1815 இல் மார்ச் 2ம் திகதி கண்டி கொலுமண்டபத்தில் வைத்து ஆளுனர் றொபோட் பிறவுண்றிக்குக்கும் கண்டிய பிரதானிகளுக்கு மிடையில் கண்டி மகுள்மடுவ மண்டபத்தில் எழுதப்பட்ட ஒப்பந்தமே கண்டிய ஒப்பந்தம் ஆகும்.

**23) கண்டிய உடன்படிக்கையின் முக்கிய விளைவுகள் எவை?**

- இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சுயாதீன அரசாகத் திகழ்ந் இலங்கை முழுமையாக அந்நியரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டமை.
- சிங்களப் பிரஜைகளின் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் மலையகப் பிரதானிகளுக்கு வழங்கப்பட்டமை.
- உடலுறுப்புக்களை சேதப்படுத்தும் தண்டணை முறை நீக்கப்பட்டமை.
- பௌத்த விகாரைகள் புத்தசாசனம் பிக்குகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டு இருந்தமை.

**24) பிரித்தானியஆதிக்கத்துக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சிகளைக் குறிப்பிடுக?**

- கி -பி 1797 இல் ஆங்கில வர்த்தக நிறுவனத்திற்கு எதிரான கிளர்ச்சி
- 1818 முதலாம் சுதந்திரக் கிளர்சி
- 1848 இல் விடுதலைக்கான இரண்டாம் கிளர்ச்சி

**25) 1797 இல் வர்த்தக சங்கத்துக்கு எதிரான கிளர்ச்சிகள் இடம்பெற்ற இடங்கள் எவை?**

- கொழும்பு றைகம
- ஹேவாகம சியன

**26) கி -பி 1818 இல் முதலாம் சுதந்திரக் கிளர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள்?**

- கண்டிப் பிரதானிகள் ஆங்கிலேயரின் அடிமைகளாக இருக்கவேண்டி ஏற்பட்டமை
- கடவைவரிகள் நீக்கப்பட்டமையால் கண்டிப்பிரதானிகள் வருமானம் இழந்தமை.
- ஆங்கிலேயர் கண்டி ஒப்பந்தத்தின் படி ஆட்சி செய்யாமை.

- வெளிநாடோன்றில் வசிக்கின்ற மக்களால் சந்திக்க முடியாத மன்னன் ஒருவனின் ஆட்சியினை மக்கள் விரும்பாமை.
- ஊவாவெல்லஸ்ஸ பகுதிக்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் முகாந்திரம் நியமிக்கப்பட்டமை.
- தானே கண்டி அரசாட்சிக்கு உரித்துடைய துரைச்சாமி எனக் கூறிக்கொண்டு வில்பாவே என்பவன் கண்டிப்பகுதியில் பிக்குமார் புடைசூழ நடமாடியமை.

**27) முதலாம் சுதந்திரப்போராட்டம் ஆரம்பமான காலம் ?**

- 1817 ஒக்டோபர் 12ஆம் திகதி ஊவாவெல்லஸவில் கிளர்ச்சி ஆரம்பமானது

**28) 1818ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு தலைமை தாங்கிய வர்களைக் குறிப்பிடுக?**

- மொனரவில கெப்பட்டிபொல
- மடுகல்ல
- கிவுலேகெதர மொஹட்டால
- பூட்டாவேரட்டோரால

**29) 1818 இல் மலையகத்தின் முதலாவது சுதந்திரப்போராட்டம் இடம்பெற்ற இடங்கள் எவை?**

- தும்பறை
- ஹேவாஹெட்ட ஏழுகோரளை மாத்தளை நுவர
- கலாவிய
- வெல்லசரிஸ்பத்துவ

1818 ஏற்பட்டபோராட்டமானது ஆங்கிலேயரினால் கொடுரமான முறையில் அடக்கப்பட்டதுடன் கிளர்ச்சித் தலைவர்களான கெப்பட்டிப்பொல. மடுகல்ல போகம்பர எனும் இடத்தில் வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டதோடு ஏனைய தலைவர்கள்நாடு கடத்தப்பட்டார்கள்

**30) 1818 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கிளர்ச்சி தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள்.**

- போராட்டம் உரிய முறையில் திட்டமிடப்படாமை.
- புனித தந்ததாது ஆங்கிலேயர் வசமானமை.
- பிரதானிகளுக்கிடையே ஏற்பட்ட தனிப்பட்ட கோபதாபங்கள்.
- ஆங்கிலேயர் மேற்கொண்ட கிராமங்கள் அழிக்கும் கொள்கை (பயிர் நிலங்களை அழித்தல்)
- துரைட்சாமி ஆட்சி உரிமையாளன் அல்லன் அவன் வில்பாவே எனும் பிக்கு என்ற உண்மை வெளியானமை.

**31) 1848 இல் சுதந்திரக்கிளர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- சிவில்சேவையாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்த காரணத்தால் சிவில் சேவை பாதிக்கப்பட்டமை.
- உள்நாட்டு விவசாயத்துறைக்கு அரச ஆதரவு கிடைக் காமை.
- மாவட்ட நிதீமன்ற முறையால் கிராமத்தவர்கள் துன்பத்துக் குள்ளானமை.
- ஸ்டுவர்ட்மெக்கன்சி ஆளுனரால் 1840 இல் பிறப்பிக்கப்பட்ட தரிசு நிலச்சட்டத்தால் விவசாயிகள் மிகவும் சிரமத்துக் குள்ளாகியமை.
- பௌத்த சமயத்துக்கான அரச ஆதரவு நீக்கப்பட்டமை.
- ரொறிங்ரன் ஆளுனர் புதிய வரிகளை விதித்தமை
- நீலப்புத்தகம் எனும் புள்ளிவிபரச் சஞ்சிகைக்கான தரவுகள் திரட்டப்பட்டபோது அது புதிய வரிகளுக்கான ஏற்பாடே என்ற வதந்தி பரவியமை
- கண்டிய மக்கள் பிரித்தானிய ஆட்சியாளருக்குமுறைப் பாடோன்றைச் செய்வதற்காக சென்றபோது ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக ஆளுனர் யுத்தகாலச் சட்டத்தைப் பிறப்பித்து மக்களை கொன்றொழித்தமை.

32) 1848 இல் இடம்பெற்ற கிளர்ச்சி பரவிய இடங்களைக் குறிப்பிடுக?

- மாத்தளை.கண்டி.தம்புள்ள. வாரியபொல குருணாகல்

**33) 1848 இல் இடம்பெற்ற கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியவர்கள்?**

- வீரபுரன் அப்பு.
- கொங்காலேகொடபண்டா
- குடாபொல பிக்கு .
- அங்குரன்கெத்த டிங்கிரிரால

**34) 1848ஆம்ஆண்டுப்போராட்டம்தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் யாவை?**

- போராட்டம் உரியமுறையில் ஒழுங்கமைக்கப்படாமையும் அனுபவம் போதாமையும்
- மலையகம் முழுவதும் சிறப்பான பாதை வசதிகள் காணப்படாமை.
- ஆங்கிலேயருக்குச் தேவையான சந்தர்பங்களில் மேலதிக படைகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை

**35) 1818 ஆம் ஆண்டுப் போராட்டத்தினை வெற்றிகொண்ட ஆங்கிலேயேர் தமதுவிருப்பப்படிவெளியிட்டகொள்கையில் பிரதானிகளது அதிகாரங்கள் எவ்வாறு குறைக்கப் பட்டிருந்தன?**

- கிராமத்தலைவர் பதவிகளுக்கு (கம்முலாதான) பதவிக்கு ஆட்களை அமர்த்துவதற்கு பிரதானிகளுக்கிருந்த அதிகாரம் நீக்கப்பட்டது.
- கண்டிப் பிரதானிகள் ஆங்கிலேயரிடம் சம்பளம் பெறும் ஊழியர்களாக்கப்பட்டனர்
- கண்டிப்பிரதானிகளுக்கு பொது மக்கள் வெகுமதிகள் வழங்குவது தடை செய்யப்பட்டது.

- ஆளுனரின் அனுமதியுடன் மலையகத்தில் மாற்றுச் சமயங்கள் பரப்பலாம் என்ற ஒருவாசகம் பிரகடனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
- ஆங்கில நீதிமன்ற முறைகள் மலையகத்தில் ஆரம்பிக்கப்பட்டமை.

**36) கி-பி 1848 இல் இடம்பெற்ற சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள்?**

- குற்றவாளியாக இனங்காணப்பட்டோருக்கு தண்டணை வழங்கப்பட்டதோடு சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.
- ரொறிங்டன் ஆளுனர் பிரித்தானியாவுக்கு திருப்பி அழைக் கப்பட்டமை.
- எதிர்ப்புக்குரிய வரிகள் நீக்கப்பட்டமை
- நீர்பாசன விவசாய நடவடிக்கைகளுக்கு அரச அனுசரணை வழங்கப்படவேண்டும் என்பதை பிரித்தானிய நிர்வாகிகள் உணர்ந்தனர்
- 1865 இல் மாநகர சபை அறிமுப்படுத்தப்பட்டமை
- 1871 இல் கிராம சபைஅறிமுகப்படுத்தப்பட்டமை.
- சுகாதார நலன்மேம்பாடு அபிவிருத்திஅடைந்தமை
- பெருந்தெருக்கள் விருத்தி செய்யப்பட்டமை.

**37) 1833 இல் கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் நடை முறைப் படுத்தப்பட்டது.**

இலங்கையிலிருந்து கிடைத்த வருமானத்தை விட நிர்வாகச் செலவு அதிகரித்தமைக்கானகாரணங்களை ஆராயவே கோல்புறூக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

1829 இல் இலங்கை வந்த வில்லியம் கோல்புறூக் இலங்கையின் நிர்வாகம். வருமானம் . அரசாங்க நிறுவனங்கள் என்பன பற்றிய ஆலோசனைகளை முன்வைத்தார்

1830 இல் வருகை தந்த சாள்ஸ் கமரோன் நீதித்துறை பற்றிய ஆலோசனைகளை முன்வைத்தார்.

**38) கோல்புறுக் சீர்திருத்தத்தின் ஆலோசனைகளைக் குறிப்பிடுக?**

- கரையோரப் பிரதேசமும் கண்டியும் இணைக்கப்பட்டு ஒரே நிர்வாக அலகாக ஆட்சி செய்யப்படவேண்டும்
- 16 மாகாணங்களாக இருந்த இலங்கையை ஐந்து மாகாணங் களாகக் குறைத்தல்.
- சிவில் சேவையாளர்களின் சம்பளத்தைக் குறைத்தலும் ஒய்வூதியத்தை நீக்குதலும்.
- கட்டாய சேவையான இராஜகாரிய சேவையினை நீக்குதல்.
- அரசின் வர்த்தக ஏகபோக உரிமையினை நீக்கி சுதந்திரமான வர்த்தக உரிமையை ஏற்படுத்துதல்.
- சட்டவாக்கசபை சட்டநிருபண சபை எனும் இருசபைகளை அறிமுகப்படுத்துதல்
- முழுநாட்டிற்கும் பொதுவான நீதிமன்ற முறையினை அறிமுகப்படுத்துதல்
- மாவட்ட நீதிமன்றம் உருவாக்கப்படுதல் வேண்டும்

1833 கோல்புறூக் சட்டவாக்க கழகம்
(15)

உத்தியோகப்பற்றுள்ளவர் (9)

உத்தியோகப்பற்றற்றவர் (6)

| | |
|---|---|
| ஐரோப்பியர் | - 3 |
| பறங்கியர் | - 1 |
| தமிழர் | - 1 |
| சிங்களவர் | - 1 |

**39) கோல்புறுக் அரசியல் திட்டத்தின் நன்மைகள்?**

- கோல்புறாக் அரசியல்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டசபை பிற்காலத்தில் பாரளுமன்றம் என்ற அமைப்புத் தோன்றுவதற்கு காரணமாக அமைந்திருந்தது.
- பிரதிநிதித்துவ அரசியல் என்கின்ற அம்சத்தை இச்சீரதிருத்தம் ஆரம்பித்து வைத்தது.
- கட்டற்ற வர்த்தகம் என்ற அறிமுகம் வர்த்தக சமூகம் ஒன்று உருவாவதற்கு வாய்ப்பாக இருந்தது
- ஆங்கிலக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமையானது ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற பிரித்தானியா அரசியல் பொருளாதார விடயங்களை நன்கு அறிந்த ஒருசுதேசிய மத்தியதரவர்க்கம் உருவாவதற்கு வாய்ப்பாக இருந்தது.
- இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இணைக் கப்பட்டமையானது பல்வேறு இன மக்களும் ஒருவருக் கொருவர் தொடர்பு பெறும் நிலை ஏற்பட்டது.

**40) கோல்புறாக் சீர்திருத்தத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.**

- இனவாரிப் பிரதிநிதித்துவம் ஆரம்பிக்கப்பட்டமையானது பிற்காலங்களில் இனரீதியாக முரண்பாடு தோன்றுவதற்கு வாய்ப்பாகஇருந்தது.
- தோட்டத்துறையின் அறிமுகமானது இரட்டைப் பொருளாதார அமைப்பை இலங்கையில் உருவாக்கிய மையினால் வரண்ட விவசாயத்துறை கவனிக்கப் படாமலே விடுகின்ற நிலை தோற்றம் பெற்றது,
- ஆங்கிலக்கல்வியின் அறிமுகமானது ஆங்கில மொழி ஆங்கிலகலாசாரம் ஊடுருவதற்குக் காரணமாக இருந்தமை.
- புதிய நிர்வாக முறையினால் மரபு ரீதியாக பின் பற்றப்பட்ட நிர்வாக முறைகள் புறக்கணிக்கப்பட்டமை.

- இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமையானது வட கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்கள் இலங்கைமட்டத்தில் சிறுபான்மை இனங் களாக்கப்பட்டமை

**41) குறுமக்கலம் சீர்திருத்தத்தின் தோற்றத்திற்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- கோல்புறாக் சீர்திருத்தத்தின் மூலம் ஆங்கிலக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமையால் இலங்கையில் ஆங்கிலம் படித்த மத்தியதரவர்க்கம் எழுச்சியுற ஆரம்பித்தமை.

- சட்டவாக்க உறுப்பினர்கள் இனரீதியாக அல்லாமல் பிரதேசவாரியாக தெரிவுசெய்யப்பட வேண்டும்.

- வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்றகோரிக்கை.

- சட்டவாக்ககழகத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்

- சட்டநிர்வாகக்கழகத்தில்இலங்கையருக்கு அங்கத்துவம் வழங்கப்படுதல் வேண்டும்.

**42) குறுமக்கல யாப்புச் சீர்திருத்தம் அமுல் படுத்தப்பட்ட ஆண்டு?**

- கி -பி 1912

**43) குறுமக்கல சீர்திருத்தத்தினை அமுல்படுத்துவதற்கு பிரித்தானியாப் பாரளுமன்றத்தில் அனுமதி பெற்ற ஆண்டு?**

- கி -பி 1910

## 44) குறுமக்கல யாப்புச் சீர்திருத்தம் (1910 - 1912)

உத்தியோகப் பற்றுள்ளவர் (11) | உத்தியோகப் பற்றற்றவர்(10)

நியமனம் (6) | தெரிவு (4)

| | |
|---|---|
| 1. இலங்கைத் தமிழர் - 2 | நகர்புற ஐரோப்பியர் - 1 |
| 2. கரையோரச்சிங்களவர - 2 | தோட்டப்புற ஐரோப்பியர் - 1 |
| 3. கண்டிசிங்களவர் - 1 | பறங்கியர் - 1 |
| 4. முஸ்லிம் - 1 | படித்த இலங்கையர் - 1 |

45) குறுமக்கலத்தின் நன்மைகளைக் குறிப்பிடுக?

- குறுமக்கலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறையும் கற்றோர்குழாத்திற்கான பிரதிநிதித்துவமும் அரசியல் யாப்பு வளர்ச்சியினைக் காட்டுவதாக விளங்குகின்றது.

- உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமையானது சுதேசிகளின் வலுவினைப் பலப்படுத்துவதாகக் காணப்பட்டமை.

- தோட்டப்புற நகர்புற ஐரோப்பியர் தெரிவானது பெருந் தோட்டத்துறையும் அது சார்ந்த உப தொழில்துறைகளும் வளர்ச்சியடைவதற்குகாரணமாகியது

46) குறுமக்கலம் சீர்திருத்தத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக?

- தேர்தல்முறைஅறிமுகப்படுத்தப்பட்டபோதும் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை கல்வியறிவு உள்ள வர்களும் சொத்துடையவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்த இலங்கையில் மொத்தசனத்தொகையில் நான்கு சதவீத மக்களுக்கே வாக்களிக்கும் உரிமை வழங்கப் பட்டிருந்தது.


- இவ்வரசியல் சீர்திருத்தத்தில் தேசாதிபதிக்கே கூடுதலான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- தோட்டப்புற நகர்புற ஐரோப்பியரின் தெரிவானது விவசாயத் துறை தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படுவதற்கு காரணமா கியது.

- சட்டநிரூபன சபையும் சட்டநிர்வாக சபையும் வேறு வேறான உறுப்பினர்களைக் கொண்டிருந்ததனால்

குறுமக்கலம் ஆளுனர் மக்கலமின் காலத்தில் முன்வைக்கப்பட்டது. சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே கல்வி கற்ற இலங்கையர் சார்பில் சட்டவாக்க சபைக்கு தெரிவான முதலாவது இலங்கையவராவர்.1919 இல் இலங்கைத் தேசிய சங்கம் உருவாக்கப்பட்டது.1915 இல் நிகழ்ந்த சிங்கள முஸ்லிம் கலவரத்தை அடக்குவதற்கு றொபட் சாமஸ் கடும் நடவடிக்கை எடுத்தார்

47) **மனிங் அரசியல் சீர்திருத்தம் -( தற்காலிகம் )**




**நியமனம் (7)**

கண்டிச்சிங்களவர் - 2
இந்தியர் - 1
முஸ்ஸிம்கள் - 1
விடே அங்கத்துவம் - 3

**இனவாரியாக தெரிவு (3)**

ஐரோப்பியர் - 2
பறங்கியர் - 1

**சங்கங்கள் மூலம் தெரிவு ( 2)**

கரைநாட்டு விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம் - 1
இலங்கை வர்த்தக சங்கம் - 1

**பிரதேசவாரியாக தெரிவு ( 11)**

மேல்மாகாணம் - 3
ஏனைய மாகாணம் ஒவ்வொன்றும் - 1

(1x 8 = 8)

**48) மனிங் சீர்திருத்தத்தின் நன்மைகளைக் குறிப்பிடுக?**

- உத்தியோகப்பற்றற்வர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டமையானது இலங்கையர்கள் அதிகளவு அரசியலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பாக இருந்தமை.
- சங்கங்களுக்கு உறுப்புரிமை வழங்கப்படடமையானது அவைசார்ந்த துறைகள் வளர்ச்சி அடைவதற்குக் காரணமாக இருந்தது.
- இந்தியர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமையானது அவர்களும் அரசியலில் பற்குபற்றுவதற்கான வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தது.
- தேசாதிபதியின் அதிகாரம் சற்றுக் குறைவாகக் காணப் பட்டது.
- சட்டநிருபன சபையில் முதன் முறையாக இலங்கையர் மூவர் நியிமிக்கப்பட்டமை.

**49) மனிங் சீர்திருத்தத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக?**

- சிறுபான்மை இனம் புறக்கணிக்கப்பட்டமை.
- எல்லோருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை.
- தேசாதிபதியின் அதிகாரம் கூடுதலாகக் காணப்பட்டமை.
- இலங்கைதேசியகாங்கிரஸ்சினால்முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை.
- தொடர்ந்தும் நிர்வாகஅதிகாரம் பிரித்தானியர் கைகளிலேலேயே காணப்பட்டமை.

| |
|---|
| மாகாணரீதியிலான தேர்தல் தொகுதியினை மனிங் யாப்பு அறிமுகப்படுத்தி இருந்தது.முதன் மதலாக உத்தியோ சார்பற்றொர் தொகை அதிகரிக்கப்பட்ட யாப்பு இதுவாகும் |

50) மனிங் டிவன்சயர் சீர்திருத்தம் - 1924

( 49 )

உத்தியோகப்பற்றுள்ளவர் (12)

உத்தியோகப்பற்றற்றவர் (37)

பிரதேசவாரி - 23 | இனவாரி - 6 | நியமனம் - 8

**சிங்களம் - 16**

**தமிழ் - 7**

| | |
|---|---|
| மேல்மாகாணம் | - 5 |
| வடமாகாணம் | - 5 |
| தென்மாகாணம் | - 3 |
| மத்தியமாகாணம் | - 2 |
| கிழக்குமாகாணம் | - 2 |
| வடமேல் மாகாணம் | - 2 |
| வடமத்திமாகாணம் | - 1 |
| ஊவாமாகாணம் | - 1 |
| சப்பிரகமுவா மாகாணம் | - 2 |

**இனவாரி ( 6)**

| | |
|---|---|
| ஐரோப்பியர் | - 3 |
| பறங்கியர் | - 2 |
| மேல்மாகாணத் தமிழர் | - 1 |

**இனவாரி ( 6)**

| | |
|---|---|
| ஐரோப்பியர் | - 3 |
| பறங்கியர் | - 2 |
| மேல்மாகாணத் தமிழர் | - 1 |

**நியமனம் ( 8)**

| | |
|---|---|
| முஸ்லிம் | - 3 |
| இந்தியர் | - 2 |
| சிறப்பு | - 3 |

**51) மானிங் டிவென்சயர் அரசியல் சீர்திருத்தத்தின் நன்மைகள்?**

- சட்டசபையில் சுதேசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டமையானது சுதேசிகளின் நிலையினை வலுவுள்ள ஒன்றாக மாற்றியது.
- பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டமையானது வேறு பிரதேசங்களின் பிரச்சினைகள் அரசியல் அரங்கிற் வருவதற்கு வாய்பாக இருந்தமை.
- இந்தியமுஸ்ஸிம்பிரதிநிதிகளின் எண்ணிக்கைஅதிகரிக்கப் பட்டமையானது அவர்களது பிரச்சினைகள் அரசியல் அரங்கில் பேசப்படுவதற்கானவாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தது.
- மேல்மாகாணத்தில் தமிழர் ஒருவருக்கு பிரதித்துவம் வழங்கப்பட்டமையானது நகரப்பகுதிகில் வாழ்ந்த தமிழ் மக்களின் நலன்கள் பேணப்பட்டமை.

**52) மானிங் டிவென்சயர் அரசியல் சீர்திருத்தத்தின் குறைபாடுகள்?**

- தேசாதிபதிக்கு அதிகாரம் கூடுதலாகக் காணப்படடமை.
- எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்படவில்லை

**53) டொனமூர் அரசியல் யாப்பின் தோற்றத்திற்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்படாமை.
- பிரித்தானியா மாதிரியிலான பாராளுமன்றம்
- அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை நிறை வேற்றப்படாமை.
- சிறுபான்மை இனத்திற்கு போதியளவு பாதுகாப்பு இல்லாமை.
- உள்ளூர் நிர்வாகங்களில் இலங்கையருக்கு சுயாட்சி வழங்கப்படாமை
- கண்டிச் சிங்களவரின் சமஸ்டிக்கோரிக்கை நிறைவேற்றப்படாமை.

**54) டொனமூர் அரசியல் சீர்திருததத்தின் முக்கியம்சங்கள்?**

- சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
- அரசுக்கழகம் அறிமுகப்படுத்தப்படடமை.
- நிர்வாகக் குழுமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ஆளுரின் அதிகரங்கள் குறைக்கப்பட்டமை.
- பிரதேசவாரிப் பிரதிநித்துவம் விரிவாக்கப்பட்டமை.
- அரசாங்க சபை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- பொதுச்சேவை நீதிச்சேவை ஆணைக்குழுக்கள் அறிமுகப் படுத்தப்பட்டமை.
- மூன்றுகாரிய தரிசிகள் நியமிக்கப்பட்டமை.
- மந்திரிசபை அமைக்கப்பட்டமை.

**55) சர்வஜன வாக்குரிமை என்றால் என்ன?**

டொனமூர் யாப்பின் பிரகாரம் 21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலரும் இன மத மொழி வேறுபாடின்றி வாக் களிக்கும் உரிமையே சர்வஜன வாக்குரிமை என அழைக் கப்படும்.

**56) சர்வஜனவாக்குரிமையின் நன்மைகளைக் குறிப்பிடுக?**

- மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டமை
- தொழிலாளர் நலன்பேணும் சட்டங்கள் உருவாக்கப் பட்டமை.
- சாதரண மக்களின் அரசியல் அறிவு வளர்ச்சி அடைந்தமை.
- அரசியல் கட்சிகள் வளர்ச்சி அடைந்தமை.
- தொழிற் சங்கங்கள் வளர்ச்சி அடைந்தமை..
- சாதரண மக்களும் அரசியல் அரங்கிற்கு கொண்டு வரப்பட்டமை.

**57) 1947 இல் அறிமுகப்படுத்தபட்ட சோல்பரி யாப்புச்சீர்திருத்தின் முக்கியம்சங்களைக் குறிப்பிடுக?**

- மாகாதேசாதி முறையினைக் கொண்டிருந்தமை.
- பாரளுமன்ற முறைமை காணப்பட்டமை. செனற்சபை பிரதிநிதிகள்சபை எனும் இரு சபைகளைக் கொண்டு காணப்பட்டது

➢ பிரதமர் தலைமையிலான அமைச்சரவை ஆட்சி

➢ அரசாங்கச்சேவைகள் ஆணைக்குழுவும் நீதிச்சேவை ஆணைக் குழுவும் காணப்பட்டமை.

**58) மகாதேசாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் குறிப்பிடுக?**

➢ சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

➢ பாரளுமன்றத்தைக் கூட்டுதல் .கலைத்தல்,ஒத்திவைத்தல் .

➢ ○ நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

○ முப்படைகளை நியமித்தல்

○ வெளிநாட்டு தூதுவர்களை நியமித்தல்

○ போர்பிரகடனம் செய்தல்.

○ சமாதானம் செய்தல்

○ கௌரவப் பட்டங்களை வழங்குதல்

➢ ○ நீதித்துதுறை தொடர்பான அதிகாரங்கள்

○ குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்

○ தண்டணைகளைக் குறைத்தல்

○ நீதிமன்ற நீதி அரசர்களை நியமித்தல்

**59) செனற்சபையின் மறுபெயர்கள்?**

1. மேல்சபை . 2ஆம் மன்றம்

**60) செனற்சபையில் அங்கத்துவம் பெறுவோருக்கு வழங்கப்பட்ட பெயர்?**

➢ செனட்டர்கள்

டொனமூர் அரசியலில் அரசாங்க சபையில் 61 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர் இவர்களில் 5 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் தேர்தலிலிருந்தும் 8 சிறுபான்மை இனங்களில் இருந்தும் மூன்று பேர் தேசாதிபதியினாலும் நியமிக்கப்பட்டிருந்தது

58) **சென்றசபையில் அங்கத்துவம் பெறுவோரின் எண்ணிக்கை?**

- 30 பேர்

62) **முதலாம் மன்றம் என அழைக்கப்படுவது?**

- மக்கள் பிரதிநிதிகள் சபை.

63) **மக்கள் பிரதிநிதிகள் சபையில் காணப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது ? அவர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றார்கள்?**

- 101 அங்கத்தவர்கள்

  இவர்களில் 95 பேர் தேர்தல்தொகுதிகளிலிருந்தும் 6 பேர் பிரதமரின் சிபார்சில் சிறுபான்மை இனங்களில் தெரிவுசெய்யப்படும்.

| |
|---|
| புதிய அரசியல் யாப்பின் படி 1947 இல் தேர்தல் நடைபெற்றது இத்தேர்தலில அதிக ஆசனஙகளைப் பெற்ற ஜக்கியதேசியக் கட்சி முதலாவது ஆசனத்தை அமைத்துக் கொண்டது.<br><br>டி. எஸ் சேனநாயக்க அவர்கள் இலங்கையின் முதலாவது பிரதமரானார் |

| |
|---|
| 1798 ஆம் ஆண்டில் இலங்கையில் சிவில்சேவை ஆரம்பிக்கப்பட்டது.<br><br>பிரட்ரிக்நோத் காலத்தில் புதிய திணைக்களங்கள் சில ஆரம்பிக்கப்பட்டன.<br>1800 - நில அளவைத்திணைக்களம்<br>1800 - பொதுவேலைத்திணைக்களம்<br>1801 - காணிப் பதிவுத் திணைக்களம் |

கோல்புறூக் காலத்தில் திணைக்களங்களில் நிர்வாகம் மேலும் ஒழுங்கு படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. பிரதேச நிர்வாகம் கச்சேரிகளைமைய மாகக் கொண்டு நடைபெற்றது

உள்ளூராட்சி மன்றங்கள் பிரித்தானியர் ஆட்சிக காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

1865 - மாநகர சபை
1871 - கிராமசபை
1897 - நகர சபை
1848 - வடமேல் மாகாணம் உருவாக்கப்பட்டன
1873 - வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்டன.
1886 - ஊவாமாகாணம் உருவாக்கப்பட்டன.
1889 - சப்பிரகமுவமாகாணம் உருவாக்கப்பட்டன

## கணிப்பீட்டுப் பயிற்சி -01

**01) இலங்கையினை ஆட்சி செய்த மேலை நாட்டவரின் தொகுதி பின்வருவற்றுள் எது?**

01 போத்துக்கேயர் ஒல்லாந்தர்

02 ஆங்கிலேயர் பிரான்சியர்

03 ஆங்கிலேயர் ஜேர்மனியர்

04 ஒல்லாந்தர் பிரான்சியர்

**02) இலங்கையில் பிரித்தானியர் தமது அதிகாரத்தை பலப்படுத்த இலங்கையின் கரையோரத்தை எப்போது கைப்பற்றினர்?**

01. 1798 02. 1795

03. 1796 04. 1802

**03) இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றுவதற்குஏதுவான காரணங்கள் ABCD எனும் கூற்றுக்களில் தரப்பட்டுள்ளது.**

A - இலங்கையின் அமைவிடம் .

B - மன்னர் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரல்.

C - மேலைத்தேச நாடுகளுக்கு இலங்கை. அச்சுறுத்தலாக இருந்தமை..

D - இயற்கைத்துறைமுகம் காணப்பட்டமை.

**04) பின்வரும் கூற்றுக்களில் சரியான விடையை கொண்ட தொகுதி பின்வருவனவற்றுள் எது?**

1. BC 2.AC

3. AB 4. AD

04) **பின்வரும் நிகழ்வுகளின் சரியான ஒழுங்கு முறையைக் காட்டும் விடை?**

A- இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றல்.

B - இலங்கை பிரித்தானிய முடிக்குரியநாடாக்கப்படல்.

C - கண்டியைக் கைப்பற்றல்

D - முதலாம் சுதந்திரப்போராட்டம்.

1. CDBA 2. ABCD 3. DCBA 4. BACD

05) **கீயுக் கடிதத்துடன் தொடர்புடைய ஒல்லாந்து மன்னன் யார்?**

1. வான் எங்கல் பெக்
2. முதலாம் ஒரேஞ் வில்லியம்.
3. இரண்டாம் ஒரேஞ் வில்லியம்.
4. றொபோட் பிறவுண்றிக்.

06) **இரட்டையாட்சி நடைபெற்ற காலப்பகுதியையும் அப்போது இலங்கையிலிருந்த பிரித்தானிய ஆளுனர் யார்?**

1. 1798 - 1802 - பிரட்ரிக்நோர்த்
2. 1798 - 1803 - மெயிற்லண்ட்
3. 1792 -1796 - பிறவுண்றிக்
4. 1800 -1804 - பிரட்ரிக்நோரத்

07) **பிரட்ரிக்நோர் கண்டி மீது படையெடுத்தமைக்கான காரணங்கள் ABCD என்பவற்றில் கீழே தரப்பட்டுள்ளது.**

A - போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தமை.

B - நாட்டில்சுதந்திரமாக கண்டி இராட்ச்சியம்செயற்ப்பட்டமை

C - திருகோணமலையையும் கொழும்பையும் இணைக்கும். தரைவழிப்பாதைக்கு இடையில்கண்டி காணப்பட்டமை

D - பிரபுக்களின்அதிகாரம் மேலோங்கிக் காணப்பட்டது

**பின்வரும்கூற்றுக்களில் மிகவும்சரியான விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க?**

1. CD 2. AC 3. BC 4. AD

08) 1815ஆம் ஆண்டுஎழுதப்பட்டகண்டி உடன்படிக்கை எந்த மண்டபத்தில் வைத்து எழுதப்பட்டது?

1) கண்டிஅரசசபை
2) மகுல்மடுவமண்டபம்
3) விகாரை
4) புத்தசாசனம்

09) 1818ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு தலைமைதாங்கிய தலைவர்களின் தொகுதி பின்வருவனவற்றுறுள் எது?

1. வீரபுரணப்பு
2. கொங்காலகொடபண்டா
3. குடாபொலபிக்கு
4. கெப்பட்டிபொலதிசாவ

10) பிரித்தானியருக்கு எதிராக இடம்பெற்ற சுதந்திரப்போராட்டம் நடைபெற்ற ஆண்டு எது?

1. 1818 2. 1838 3. 1848 4. 1837

11) புராதன ஆரிய குடியிருப்புக்களின் ஒன்றான உருவெலகாமம் குறிப்பிடப்பட்ட எழுத்து எது?

1. A 2. B
3. C 4. D

13) பிக்குனி சங்கமித்தை உட்பட்ட குழுவினர் இலங்கையில் தரை இறங்கிய இடம்குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து?

1. Q 2. P
3 R 4. A

# அத்தியாயம் 02

## பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக பொருளாதார மாற்றங்கள்.

**01) பெருந்தோட்டப்பயிற்செய்கை விருத்திக்கு வழிகோலிய காரணிகளைக் குறிப்பிடுக?**

- ஐரோப்பியர்இந்நாட்டிற்கு குடியேற அனுமதிக்கப்பட்டமை.
- கட்டாய சேவையான இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை.
- காணி விற்பனைக் கொள்கையினைப் பின்பற்றியதன்
- ஊடாக வெளிநாட்டு மூலதனம் இந்நாட்டிற்கு வருவதற்கு வழிவகுக்கப்பட்டமை.

**02) பண்டைக்காலத்தில் நில உரிமை நிலவிய விதம்?**

- காணியாளரின் உரிமையாளர் அரசனாவார்
- அரசபணிகள் புரிகின்ற அலுவலர்களுக்கு வேதனத்திற்குப் பதிலாக காணிகள் வழங்கப்பட்டமை.
- அரச பணியாளர்கள் அக்காணிகளில் பயிற்செய்கைக்காக சாதரண மக்களை ஈடுபடுத்தியமை.
- நிலவரி செலுத்தும் முறை காணப்பட்டமை.
- கட்டாய இராஜகாரிய முறை மேற்கொள்ளப்பட்டமை.

**03) பிரட்ரிக்நோத் இராஜகாரிய முறையினை ஒழிக்க வேண்டும் என்பதற்கு கூறிய காரணங்களைக் குறிப்பிடுக?**

- சுதேச அதிகாரிகள் பொதுமக்களின் உழைப்பை உறிஞ்சி தனிப்பட்ட தேவைகளுக்காக அவற்றைப் பயன்படுத்தியமை.
- மனிதர்களுக்குப் பொருந்தாத அடிமை முறை போல் காணப்பட்டமை.
- நாட்டின் அபிவிருத்திக்காக உழைப்பைப் பெறுவது தடையாகக் காணப்பட்டமை.

**04) கட்டாய இராஜகாரிய முறையினை நீக்கிய சீர்திருத்தம்?**

- கோல்புறூக் சீர்திருத்தம்

**05) கோல்புறூக் கட்டாய சேவை இராஜகாரிய முறையினை நீக் கியமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- தனிப்பட்ட முயற்ச்சியார்களுக்கு ஊழியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வழிஅமைத்துக்கொடுப்பதற்கு.
- பொதுமக்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களை இல்லாமல் ஒழிப்பதற்கு.
- விவசாயத்தினை விருத்தி செய்வதற்கு.

**06) பெருந்தோட்டப் பயிற்செய்கையின் தோற்றமும் அதன் பரம்பலுக் குமான காரணங்களைக் குறிப்பிடுக?**

- கரையோரப்பிரதேசங்களை ஆட்சி செய்த போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் காட்டில் இயற்கையாக வளரும் கறுவாவைப் பெற்று வியாபாரம் செய்தமை.
- ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் கறுவாபயிரிட முயற்சித்தமை.தற்போது கொழும்பிலுள்ள கறுவாத்தோட்டம் இப்படியான ஒரு பிரதேசமாகும்.
- கி-பி 1833 கோல்புறூக்கின்ஆலோசனைகளினால் புதிய பொருளாதாரக் கோலங்களுக்கான அடிப்படை உருவானமை.
- அரசாங்கத்தின் அனுமதியுடன் கோப்பிப் பயிற்செய்கை மேற்கொள்வதற்கான பரிட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை.
- சிவில் சேவையாளர்களுக்கு தனிப்பட்ட தொழில்கள் செய்வதற்கு அனுமதிவழங்கப்பட்டமை.
- சிற்றளவில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிப்பயிற்செய்கை 1840 இல் பாரிய தோட்டங்களாகமலைநாடுகளில் பரவலடைந்தமை.

**07) கோப்பப் பயிற்செய்கை பரவலடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பிற்காக அறவிடப்பட்ட தீர்வை வரி குறைக்கப்பட்டமை.
- மேற்கிந்தியத் தீவுகளில் கோப்பிப்பயிற்செய்கை அழிவுற்றமை.
- கோப்பிப்பயிற்செய்கையில் முதலீடு செய்த உற்பத்தியாளர்கள் அதிகளவாக இலாபம் ஈட்டியமை. இதனால் கோப்பி வெறி என வர்ணிக்கப்படும் வகையில் கோப்பிப்பயிற்செய்கை விரிவடைந்தமை
- வெற்றிகரமான பயிற்செய்கை முறைகளை பின்பற்றப்பட்டமை.
- குறைந்த வேதனத்தில் தென்னிந்திய தொழிலாளர் கொண்டுவரப்பட்டமை.
- அரசின் நிலங்களை விற்பதற்கான 1840 இல் இல 12 கொண்ட தரிசு நிலச்சட்டம் உருவாக்கப்பட்டமை.

**08) கோப்பிப்பயிற் செய்கைக்கு 1825 இல் விதிக்கப்பட்ட வரியினை நீக்கியவர்?**

- பாண்ஸ்

**09) கன்னொறுவையில் தனியார் கோப்பித்தோட்டத்தினை ஆரம்பித்து வைத்தவர் யார்?**

- 1824 இல் எட்வேட் பாண்ஸ்

**10) 1830 இல் கோப்பி பயிரிடப்பட்ட இடங்களைக் குறிப்பிடுக?**

- காலி - உடுகமை
- தும்பறைப் பள்ளத்தாக்கு
- கம்பளை
- பேராதனைப் பிரதேசங்கள்

11) **கம்பளையிலுள்ள சிங்ஹபிட்டி என்ற இடத்தில் கோப்பித் தோட்டத்தினை ஆரம்பித்து வைத்தவர்?**

- 1822 இல் ஜோர்ஜ் பர்ட்.

12) **கோப்பிப்பயிற்செய்கை வீழ்ச்சி அடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- 1868 இல் கோப்பிச் செடிகளில் ஹெம்மீலியா வஸ்டாக் பீடித்தமையே கோப்பிப்பயிர் பாதிப்படையக் காரணமாகியது.
- 1881 கோப்பிப்பயிற் செய்கை முற்றாக அழிவடைந்து வேறுபயிர்களில் நாட்டம் ஏற்பட்டமை.

13) **சிங்கோனாப் பயிற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?**

- 1878.

14) **கி - பி 1890 இல் தேயிலைப் பயிற்செய்கை பரவலடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- லண்டன் சந்தையில் தேயிலையின் விலை அதிகரிக்கப்பட்டமை.
- பசளையின் உபயோகம் அதிகரிக்கப்பட்டமை
- புகையிரதம் மற்றும் ஏனைய போக்குவரத்துத்துறைகள் விருத்தி அடைந்தமை.
- கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டமை.
- தென்னிந்தியத் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை.
- உற்பத்தி பெருமளவுக்கு இயந்திரமயமாக்கப்பட்டமை
- இலங்கைத் தேயிலைக்கான கேள்வி அதிகரித்தமை.
- 1920 களில் புதியகாணிகளில் தேயிலை பயிரிடப்பட்டமை.

**15) இலங்கையிலுள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையத்தைக் குறிப்பிடுக?**

➢ தலவாக்கல

**16) இலங்கையில் பயிற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?**

➢ 1873 ஜேம்ஸ் ரெயிலர்

**17) இலங்கையில் பயிற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?**

➢ 1873 ஜேம்ஸ் ரெயிலர்

> 1929 இல் ஏற்பட்ட உலகப் பொருாதாரவீழ்ச்சியுடன் ஏற்றுமதி குறைவடைந்து தேயிலைபயிற்செய்கை வீழ்ச்சிடைந்தது.
>
> 1925 தலவாக்கல எனும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் இலங்கையில் நிறுவப்பட்டது

**18) தெங்குப் பயிற்செய்கைக்கான முதலீடுகளை ஐரோப்பியர்மேற் கொண்ட ஆண்டு?**


➢ 1910

**19) தெங்கு ஆராய்ச்சி நிலையம் இலங்கையில் அமைந்நுள்ள இடத்தினைக் குறிப்பிடுக?**


லுணுவில

20) இலங்கையில் தெங்குப் பயிற்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள்

## இலங்கையில் தென்னை பயிரிடப்படும் இடங்கள்



இலங்கையில் இறப்பர் பயிரிடப்படும் இடங்கள்




**21) இறப்பர் பயிற்செய்கையின் பரம்பலுக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- ➢ முதலாம் உலகப்போரின் காலப்பகுதியில் இறப்பரின் விலை அதிகரித்தமை.
- ➢ ஐக்கியஅமெரிக்கா இலங்கையிலிருந்து இறப்பரை கொள்வனவு செய்தமை.
- ➢ பிரித்தானியாவில் மோட்டார் வாகனக் கைத்தொழில் விருத்தி அடைந்தமை.

**22) இலங்கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்?**

- அகலவத்தை

**23) இறப்பர் பயிர் வீழ்ச்சி அடைந்த ஆண்டு?**

- 1929

**24) பாரம்பரிய விவசாய முறைபுறக்கணிக்கப்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- பிரித்தானியா அரசு பெருந்தோட்டப்பயிற்செய்கையில் ஈடுபட்டிருந்தமையினால்தேசிய விவசாயத்துறையில் அக்கறை காட்டாமை.
- கோல்புறுக் சீர்திருத்தத்தின் கீழ் உள்நாட்டு விவசாய நடவடிக்கைகள் இடம்பெற உதவியாக கட்டாய சேவையாக அமைந்த இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை.
- விவசாய நடவடிக்கைகளுக்கு அரசின் அனுசரனை கிடைக்கப் பெறாமை.
- பெருந்தோட்டப் பயிற்செய்கைக்கு காணிகள் வழங்கப்பட்ட மையினால் நெற்செய்கை அழிவடைந்தமை.

**25) 19ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் பாரம்பரிய விவசாய முறையினை முன்னேற்றுவதற்கு எடுத்த முயற்சிகளைக் குறிப்பிடுக?.**

- பழைய நீர்பாசன முறைகளைச் சீரமைத்து உலர் வலயத்தில் மக்களை குடியேற்றுவதில் இவர்கள் கூடிய கவனம் செலுத்தியமை.

உ-ம் - 1855 -1860 பிரித்தானி ஆளுனரான ஹென்றிவோட் இறக்ககாம .கிரம ஊறுப்பொக்க குளங்களைப் புனரமைத்தமை.

1866 இல் ஹெர்கியூலிஸ் ரொபின்சன் திஸ்ஸமஹாராம குளத்தை திருத்தியமைத்தார்.

- 1872 இல் வில்லியம் கிரகெரி கந்தளாய் குளத்தைப் புனரமைத்தமை.
- 1883 - 1890 இல் ஆத்தர் கோடன் கலாவாவியைப் புனரமைத்தமை.
- 1896 இல் வெஸ்ட் றிஜ்வே யோதவாவி நாச்சதுவவாவி என்பவற்றைப் புனரமைத்தமை.
- ஹென்றி ஆத்தர் பிளோக் நுவரவாவியைப் புனரமைத்தார்
- மெக்கலம் மின்பேே கால்வாயினைப் புனரமைத்தமை.
- 1900இல்வெஸ்ட்றிஜ்வே நீர்பாசத்திணைக்களத்தினை ஆரம்பித்தமை.
- கூட்டுறவுக் கடன் வழங்கல் சங்கங்கள் தோற்று விக்கப் பட்டமையும் அதனால் விவசாயிகளுக்கு சேவைகள் கிடைக்கப் பெற்றமை.
- 1912 இல் விவசாயத்திணைக்களம் நிறுவப்பட்டமை.

**26) நடுத்தர வர்க்கம் தோற்றம் பெறுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்.**

- கோல்புறுாக் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆங்கிலக்கல்வியின் காரணமாக ஐரோப்பிய கலாசாரத்தினை மதிக்கும் தேசியகலாச் சாரத்தினை ஒதுக்கும் செல்வந்தர்களின் குழுவொன்றினை உருவாக்கி இருந்தது.
- ஆங்கிலக்கல்வியினைப் பெற்று மேலைத்தேய நாகரி கத்துக்குப் பழக்கப்பட்டோர் உருவாகியதுடன் அவர் களிடம் செல்வம் கல்வி என்பன இருந்தபோதிலும் ஆட்சி அதிகாரம் இல்லாது இருந்தமை.
- 20 நூற்றாண்டு முற்பகுதியில் சுதந்திர போராட்டத்திற்கு தலைமை வகித்த இவர்கள் தேசிய நடுத்தரவர்க்கத்தினர் ஆயினர்.

- தேசிய செல்வந்த குழுவினர்மது விற்பனை செய்தல் றேந்தை கொள்வனவு செய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டமை.
- பெருந்தோட்டத்துறை உரிமையாளராகி செல்வத்தைப் பெற்றுக் கொண்டமை.
- மத்தியதர வர்க்கம் உருவாவதில் கல்வியும் செல்வமும் செல்வாக்குப் பெற்றிருந்தது.

## 27)தொழிலாளர் இயக்கம் வளர்ச்சி அடைந்த விதம்.

- பிரித்தானியரின் கீழ் இந்நாட்டில் பெருந்தோட்டப் பயிற் செய்கை ஆரம்பமானதுடன் உழைப்பை பணத்திற் குவிற்கும் முறை ஆரம்பமானது இதனால் தொழிலாளர் வகுப்பொன்று உருவானமை
- பெருந்தோட்டத்திற்கு தேவையான உழைப்பைப்பெற்றுக் .கொள்ள இயலாமையினால் தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்களினைப் பெற்றுக் கொண்டமை
- ஆரம்பகாலத்தில் மத்திய மலைநாட்டுக்குப் பெருந் தோட்டப் பகுதிகளுக்கான உழைப்பாளராகவும் 19 நூற் றாண்டின்இறுதிப்பகுதியில் கொழும்புப் பகுதியில் பயிற்றப் படாததொழிலாளர்களாகவும் தென்னிந்தியாவில் இருந்து வந்த தொழிலாளர்கள் இலங்கையின் மக்கள் சமுதாயத்தில் தனியானதொருமக்கள் தொகுதியினராக உருவானமை.
- 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட நகராக்கம் காரணமாகபொருள் ஏற்றுதல் பொருள் இறக்குதல் சலவைசெய்தல்வண்டி இழுத்தல் கப்பல் சீரமைத்தல் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர் தோற்றம் பெற்றமை.

**28) 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மத்தியதர வர்க்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப்போரட்டங்கள்.**

- அச்சுத்தொழிலாளர்களின்வேலைநிறுத்தப் போராட்டம்
- வண்டித் தொழிலார்களின் வேலைநிறுத்தப் போராட்டம்.
- வெள்ளவத்தை ஆடைத்தொழிற்சாலை வேலை நிறுத்தப் போராட்டம்.
- சலவை செய்வோரின் வேலை நிறுத்தப்போராட்டம்

**29) தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணங்கள்.**

- தொழிலாளர்களின் தொழில் நிலைமையினை மேம் படுத்தவும் ஊதிய உயர்வினை மேம்படுத்திக் கொளளவும் போராட்டங்களை மேற்கொள்ளவும் 1920 இல் தொழில் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டது.

**30) தொழில் சங்கங்கள் தோற்றம் பெற தலைமை தாங்கியவர் ?**

- ஏ. ஈ குணசிங்க

**31) தோட்டத் தொழிலார் சங்கம் உருவாக்கப்பட்ட ஆண்டு.**

- 1935 இல்

**32) பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஒன்றிணைப்பதற்கு உருவான அமைப்பு .**

- லங்கா சமசமாசக்கட்சி

**33) தோட்டத்தொழிலாளருக்கு முதலில் தலைமை தாங்கியவர்.**

- நடேச ஐயர்

**34) தேசிய இயக்கம் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள்.**

- ஆங்கிலம் கற்றவர்கள் அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக தேசிய இயக்கத்தினை ஆரம்பித்தனர்

- சமய கலாசார மறு மலச்சியினை ஏற்படுத்துவதற்காக தேசிய இயக்கம் தோற்றம் பெற்றது.

**35) 1915 இல் சிங்கள முஸ்லிம் கலவரத்தில் தேசிய இயக்கத்துடன் தொடர்புடைய தலைவர்கள்.**

- டி. எஸ் சேனாநாயக்கா
- எப். ஆர் சேனாநாயக்கா
- டி.பீ ஜயதிலக
- சீ .படுவன்துடாவ
- சீ. ஏ ஹேவாவிதாரண
- ஏ. ஈ குணசிங்க

**36) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கல்வி எவ்வாறு காணப் பட்டிருந்தது.**

- 1812 றொபோட் பிறவுண்றிக் தேசாதிபதி இலங்கைக்கு வருகைதந்ததுடன் மிசனரிகள் இந்நாட்டின் கல்வியில் ஈடுபட்டமை.
- கோல்புறூக் ஆணையாளரின் இலங்கைக்கான வருகை யின்போது கல்வி வளர்ச்சிக்குச் செய்த முன்மொழிவுகளாக
- கல்வி நிர்வாகத்திற்கென பாடசாலை ஆணைக்குழுவை நிறுவியமை.
- ஆங்கில மொழிப்பாடசலைகளை ஏற்படுத்தியமை.
- ஆங்கிலம் கற்ற இலங்கையரை அரசபணிகளில் இணைத்துக் கொண்டமை.

**37) மக்கன்சி ஆளுனர்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வி மறு சீரமைப்புக்கள்**

- தாய்மொழி மூல பாடசாலை ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை.
- சுயமொழிப்பாடசாலைகள் இரு மொழிப்பாடசாலைகள் உருவாக்கப்பட்டமை.
- மத்தியகல்லூரி முறை உருவாக்கப்பட்டமை.

➢ கொழும்பு அக்கடமி மத்திய நிலையம் உருவாக்கப்பட்டமை.

**38) 1865 இல் மோர்கன் ஆளுனரின் முன்மொழிவுகள்**

➢ பொது போதனாத் திணைக்களம் உருவாக்கப்பட்டமை.
➢ கல்வியின் பொறுப்பு அரசுக்கு உரித்தாக்கப்படல்
➢ தனியார் பாடசாலைக்கு உதவி வழங்குதல்
➢ ஆரம்பக்கல்வியினைத் தாய்மொழியில் வழங்கப்படுதல் ந வேண்டும்.
➢ பெண்களின் கல்வியினை மேம்படுத்தல்
➢ தொழிற் பாடசாலை மும்மொழிப்பாடசாலை மத்திய பாடசாலை கொழும்பு அக்கடமி .ஆசிரியர் பயிற்ச்சிப் பாடசாலை. என பாடசாலை வகைப்படுத்தப்பட்டது.

**39) 1920 மெனிங் அரசியல் சீர்திருத்தத்தில் கல்வி சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள்**

➢ கல்வியை மாவட்டக் குழுக்களிடம் ஒப்படைத்தல்.
➢ முறையான தோட்டப்பாடசாலைகள் உருவாக்கப்படல்
➢ பாடசாலை செல்வது கட்டாயமாக்கப்படல்.
➢ அரசாங்கப்பாடசாலைகளில் சமயப்போதனை தடுக்கப்பட்டமை.
➢ கல்வித்திணைக்களத்தையும் கல்விச்சபையும் சட்டபூர்வ மாக்கியதன் மூலம் மத்திய நிர்வாகம் ஒன்று உருவாக் கப்பட்டமை.

**40) டொனமூர் சீர்திருத்தத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட கல்வி ஆலோசனைகள்.**

➢ தாய்மொழியில் கல்வி வழங்கப்படுதல்
➢ கட்டாயக்கல்வி முறை
➢ பாலர் கல்வியிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசமாக கல்வி வழங்குதல்.
➢ கிராமிக்கல்வியினை மேம்படுத்துவதற்கு ஹந்தெஸ்ஸ யோசனைகளை அமுலுக்கு கொண்டுவருதல்

- தேசிய பரீட்சை முறையினை உருவாக்குதல்
- இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்
- மத்திய பாடசாலைகளை ஆரம்பித்தல்
- பாடசாலைகளில் சமய பாடம் கட்டாயபாடமாக்கப்படல்.
- ஆசிரிய பயிற்ச்சிக்காக விடே நிறுவனங்களை ஏற்படுத்துதல்.

**41) பௌத்த சமய வளர்ச்சிக்கு துணைபுரிந்த பிக்குகள்**

- வலானே சித்தார்த்த - 1839 இரத்மலானையில் பரமதர்ம சைத்திய பிரிவெனாவை ஆரம்பித்தமை .
- கிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர் - 1873 இல் மாளிகாகந்தையில் வித்யோதயா பிரிவெனாவை ஆரம்பித்தமை.
- இரத்மலானை தர்மிலோகதேரர் - 1875 இல் பேலியாகொட வித்தியாலங்கரா பிரிவெனாவை அமைத்தமை.
- மீக்கொட்டுவ குணாநந்ததேரர் - ஐம்பெரும் வாதங்களில் ஈடுபட்டனர்

**42) மீகெட்டுவத்தை குணாநந்த தேரர் மேற்கொண்ட ஐம்பெரும் விவாதங்கள்.**

- 1864 - பத்தேகம விவாதம்
- 1865 - வராகொட விவாதம்
- 1866 - உதம்விட விவாதம்
- 1871 - கம்பளை விவாதம்
- 1873- பாணந்துறை விவாதம்

**43) ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சமயப்பணிகள்**

- பௌத்தரானமை.

➢ பிரம்மஞான சங்கம் என்னும் பௌத்த தாபனத்தைத் தோற்றுவித்து ஆனந்த நாளாந்த தர்மராஜ மஹிந்த கல்லூரியினை ஆரம்பித்தமை.

➢ ஞாயிறு தினங்களில் சமயபாடசாலைகளை நாடாத்தியமை

➢ சரசவி சந்தரெச எனும் பத்திரிகையினை ஆரம்பித்து பௌத்தர்களை ஒன்று படுத்தியமை.

➢ பெண்களின் கல்விக்காக கொழும்பு விசாக வித்தியா சாலையினை மியூசியஸ் மகளிர்வித்தியாலயத்தை அரம்பித்தமை.

### ஏ.ஈ குணசிங்க

இலங்கை தொழிலாளர் இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படும் அலெக்சாண்டர் ஏகநாயக்க அவர்கள் 1891 இல் பிறந்தரர் அவர் கண்டி தர்மராஜவித்தியாலயத்தில் கல்வி பயின்றார் சிறு வயதிலிருந்தே தேசிய உணர்வு மிக்க வாலிபரான அவர் அரச எழுதுவனைஞர் சேவையிலிருந்து விலகி பொதுச்சேவையில் புகுந்தார். அக்கால சிங்களத்தலைவர்கள்போல அவரும் மது ஒழிப்பு இயக்கத்தில ஈடுபட்டார் 1915இல்இனக்கலவரத்தின்போது கைதான தேசியத்தலைவர்களில் இவரும் ஒருவராவார்.அரச அதிகாரிகளிடமும் முதலாளிகளிடமும் சிக்குண்ட எவ்வித உரிமைகளும் இன்றி நிர்க்கதியான தொழிலாளர்களை ஒன்று திரட்டி ஒன்றுபடுத்தினார்.

1923 இல் இலங்கை தொழிலாளர் சங்கத்தினை ஆரம்பித்தார். அது இலங்கையின முதலாவது தொழிலாளர் இயக்கமாகும். இத்தொழிற்சங்கத்தின் கீழ் தொழிலாளர்களின் உரிமையினைப் பெற்றுக் கொள்வதற்காக வேலை நிறுத்தப்போரட்டங்களில் ஈடுபட்டார். 1927 இல் தொழிலாளர் வேலைநிறுத்தம் 1929 இல் கொழும்பு நகரினுள் போக்குவரத்திலீடுபட்ட ஐரோப்பிய கம்பனிஒன்றுக்கு சொந்தமான ட்ராம்

கார் வேலைநிறுத்தம் இவற்றுள் முக்கியமானவையாகும் . வேலைநிறத்தங்களில் ஈடுபடுவதனால் ஐரோப்பிய முதலாளி மார்களிடமிருந்து உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை தொழிலாளர்களுக்கு உணர்தினார்.

1931 இல் இவர் மத்திய கொழும்பிலிருந்து அரசுக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார் 1947 .இல் மத்திய கொழும்பிலிருந்து பாரளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். பின்னர் வெளிநாட்டு தூதுவராகக் கடமையாற்றினார். இவ்வாறு செயற்பட்ட இவர் 1964 இல் காலமானார்

## டி. எஸ் சேனநாயக்க.

இவர் 1884 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மீரிகம என்ற இடத்தில் பிறந்தார். பிரித்தானி ஆட்சியாளர்கள் உள்நாட்டு விவசாயம் நீர்பாசனம் என்பன பற்றி முயற்சி எடுக்காத யுகத்தில் விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் ஊடாக உணவை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு முயற்ச்சி எடுத்த முன்னோடியாவார்.
1912 ஆம் ஆண்டு நாடுபூராகவும் மதுபான விற்பனை சாலைகளை உண்டாவதற்கு அரசு எடுத்த தீர்மானத்திற்கு எதிராக செயற்பட்டு வந்தவராவார்.1915 இல் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக

மது ஒழிப்புத்தலைவர்களுடன் இவர் சிறைப்படுத்தப்பட்டார் சிறையில் தனக்கு ஏற்பட்ட துன்பங்களை நினைத்து இலங்கை தேசிய சங்கத்துடன் இணைந்து சுதந்திரப்போராட்டத்தின் செயற்பாடுகளில் முன்னணி வகித்தார். 1924 இல் சட்டவாக்க சபைக்குதெரிவுசெய்யப்பட்டார் 1931 இல் டொனமூர் அரசுக் கழகத்தில் விவசாய அமைச்சராக கடமையற்றினார்.

1947 இல் ஐக்கியதேசியக்கட்சினை ஆரம்பித்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டு இலங்கையின் முதலாவது பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படடார். 1948 இல் இந்தியா வம்சாவளிச்சட்டம் .கல்லோயாக் குடியேற்றத்திட்டம் என்பன அவரது முக்கிய சேவையாகும்

இந்து சமய மறுமலர்ச்சிக்காக ஆறுமுக நாவலர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோர் பணியாற்றினர். ஆறுமுகநாவலர் யாழ்பாணம் வண்ணார் பண்ணையில் சைவப்பாடசாலையினை நிறுவினார்.கிறிஸ்தவ சமயத்துக்கு எதிராக கண்டனங்களை வெளியிட்டு சமய மறுமலர்ச்சிக்கு பணியாற்றினார் இவர் 1822 இல் யாழ்பாணம் நல்லூரில் கந்தப்பிள்ளை சிவகாமியமமையாருக்கு மகனாகப்பிறந்தார்

**அறிஞர் எம் .சி . எம் சித்திலெப்பையின் பணிகள்.**

- சாகிராக் கல்லூரியினை நிறுவியமை
- அராபிய மொழிகற்பித்தலை விரிவாக்கியமை
- மதரிஸா எனும் சமயக்கல்விப்பாடசாலைகளை உருவாக்கியமை.
- முஸ்ஸிம் ே நசன். ஞானதீபம் பத்திரிகைகளை ஆரம்பித்தமை.
- கொழும்பு முஸ்ஸிம் சங்கத்தினை ஆரம்பித்து தமது
- பணிகளை மேற்கொண்டிருந்தார்.

| | |
|---|---|
| 1864 - | லக்மினி கிரண லக்மினிபஹண அருணோதய |
| 1866 - | ஞானார்த்த பிரதீபய பத்திரிகை. |
| 1880 - | சரசவி சந்தேசய |
| 1902 - | சிங்கள ஜாதிய |
| 1909 - | தினமினப் பத்திரிகை |
| 1888 - | இந்தசாதனம் |
| 1930 - | வீரகேசரி |
| 1931 - | தினகரன் பத்திரிகை |

**கணீப்பிட்டு பயிற்சி -2**

1) **போத்துக்கேயர் இலங்கையின் வருகையின் போது காணப்பட்ட பொருளாதார முறை அல்லாதது?**

- பண்டமாற்று பொருளாதாரம்.
- சுயதேவை பொருளாதாரம்.
- இராஜகாரியமுறை.
- வெளிநாட்டுப் பொருளாதாரம்.

## அலகு - 3

## இருபதாம் நூற்றாண்டில் எழுச்சி பெற்ற ஆசிய நாடுகள்

**01) போத்துக்கேயர் ஒல்லாந்தர் வருகையினால் ஏற்பட்ட சமூக பொருளாதார விளைவுகள் பின்வருவனவற்றுள் எது?**

01 வர்த்தகத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை.

02 சம்பள முறை காணப்பட்டமை.

03 இராஜகாரிய முறைமை மேம்படுத்தப்பட்டமை.

04 கிராமிய விவசாயம் முடங்கியமை.

**02) இராஜகாரிய முறைமை எந்தப்பிரித்தானிய ஆளுனர்காலத்தில் ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.**

01. பிரட்ரிக்நோர்த்

02. பிறவுண்றிக்

03. டெய்லி

04. மெயிற்லண்ட்

**03) பிரட்ரிக்நோர்த்தினால் இராஜகாரிய முறமையினை மீண்டும் எந்தப்பிரித்தானியர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது?**

01. பிரட்ரிக்நோர்த்

02. பிறவுண்றிக்

03. டெய்லி

04. மெயிற்லண்ட்

**04) கோப்பிப் பயிர் செய்கை விரைவாக பரவலடைந்தமைக்கான காரணமதரிசு நிலசட்டம் என்பதாகும் இவ்தரிசுநிலசட்டம் எத்தனை யாம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.**

01. 1838

02. 1840

03. 1848

04.. 1842

05) 1822 ஆண்டு ஜோர்ஜ் பர்ட்என்பவர் கோப்பித்தோட்டத்தை இலங்கையில் எந்த மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்தார்?

1. மாத்தளை 2. நுவரெலியா

3. கம்பளை 4. கொழும்பு

06) மேலைநாட்டவர் இந்தியாவுக்கு வருகைதந்தமைக்கான பிராதான நோக்கம்.

- வர்த்தகநோக்கம் . மதத்தினைப்பரப்புதல்

07) இந்தியாவின் பல பாகங்களில் ஆட்சி புரிந்த இனத்தவர்கள்.

- போத்துக்கேயர் ஒல்லாந்தார். பிரான்சியர்

08) இந்தியாவில் பிரித்தானியர் தமது ஆட்சியினை நிறுவுவதில் வெற்றிகண்ட ஆண்டு.

- 1848 இல்

09) கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திற்கு எதிராக கிளர்ச்சிகள் மேற் கொள்ளப்பட்ட ஆண்டுகள்.

- 1806 . 1844. 1849 . 1850 . 1852.

10) சிப்பாய்க் கலகம் எற்பட்ட ஆண்டு .

- 1857

11) சிப்பாய்க் கலகம் பரவிய இடங்கள்

- தில்லி
- லக்னோ
- கான்பூர்
- மத்தியபிரதேஸ்
- புன்தெல்கான்ட்
- உரோஹில்
- கன்ட்

**12) 1857 இல் கிளர்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள்**

